சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 100/2023

பெயர். திருமதி.மின்னலா க /பெ. முத்து நாள்.25.09.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1) விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.1.** பிரிவு மாற்று அறிக்கையின் உண்மை நகல் ம.த.சா.ஆ.2. என் மகனின் பிரேத பரிசோதனை அறிக்கை ம.த.சா.ஆ.3. என் மகனின் இறப்புச் சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.4. என் மகனின் வாரிசுச் சான்றிதழ் ம.த.சா.ஆ.5. என் மகன் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் ம.த.சா.ஆ.6. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் ம.த.சா.ஆ.7. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமத்தின் நகல், காப்பீட்டுச் சான்றிதழ் நகல் மற்றும் பதிவு சான்றிதழ் நகல் முறையே ம.த.சா. ஆ.8 முதல் 10. என் மகன் ஓட்டிச் சென்ற வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.11. எங்களுடைய ஆதார் அட்டைகள் நகல்கள்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.த.சா.ஆ.12 மற்றும் 14. குடும்ப அட்டையின் நகல் ம.த.சா.ஆ.15 எங்களுடைய வங்கிக் கணக்குப் புத்தகங்களின் 16 முதல் 18. என் மகனின் மரண அறிக்கை ம.த.சா.ஆ.19. என் மகன் ஓட்டிச் சென்ற வாகனத்தின் காப்பீட்டுச் சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.20. என் கணவரின் இறப்புச் சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.21. குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் நகல் ம.த.சா.ஆ.22. குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வரைபடம் நகல் ம.த.சா.ஆ.23. விபத்தில் இறந்துபோன சூர்யகுமாரின் ஆதார் அட்டையின் நகல் ம.த.சா.ஆ.24. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

2) 2ம் மனுதாரருக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 3ம் மனுதாரருக்கு திருமணம் ஆகவில்லை. என் மகனின் வயதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மகனின் தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகனின் ஓட்டுநர் உரிமமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகனின் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டத் தெரியாது என்றாலும், அதனால்தான் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் விபத்துக் காலத்தில் இருந்தது என்றால் சரிதான். அவருடைய வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தல் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய மனு காலவரை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதுல் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

3) என் மகனுக்கு விபத்து சமயத்தில் திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரேத விசாரணை அறிக்கையின் படி என் மகனுக்கு 23 வயது என்றால் சரிதான். குற்ற அறிக்கையில் யாரும் கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 2ம் மனுதாரருக்கு விபத்திற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். திருமணம் ஆன நாள் முதல் அவரின் கணவரின் பராமரிப்பில் இருந்து வருகிறார் என் றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் என் மகனின் ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவிலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாால் சரிதான். விபத்து பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். என் மகன் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டத் தெரியாமல் விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. என் மகனுக்கு

வாகனம் ஓட்டத் தெரிந்திருந்தால் அதற்கான உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) இறப்பு ஏற்பட்டவுடன் என் மகனை எங்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். விபத்துப் பதிவேடு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் என்ன வேலையில் இருந்தார் என்றால் நிதி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். என் மகனின் தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவில் என் மகன் தினக்கூலி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் மகனுக்கு எங்கு அதிகமாக அடிப்பட்டு இறந்தார் என்றால் கால் மற்றும் இடுப்பில் அடிப்பட்டு இறந்தார். விபத்து முழுக்க முழுக்க என் மகனின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வெவ்வேறு தலைப்புகளின் கீழ் நாங்கள் கோரியுள்ள தொகைகள் மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து என்னுடைய மனு தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.